**05.03.2026**

கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் )

விழுப்புரம்.

SC No.259/2025

அ.சா.2

<u>பெயர். திரு.இளவேந்தன்.</u>

சாட்சி மனுவில் நீதிமன்ற உத்தரவின் பேரில் அழைத்து சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>

சம்பவ இடத்தில் வாகன தணிக்கையில் ஈடுபட்டது குறித்து எனது பாக்கெட் டைரியில் குறித்து வைத்துள்ளேன் என்றால் ஆமாம். என்னை உதவி ஆய்வாளர் விசாரணை செய்தபோது நான் அதை ஒப்படைத்தேனா? என்றால், ஒப்படைத்தேன். நான் சம்பவ இடத்திற்கு வருவதற்கு முன்பு வேறு எந்த பணியில் இருந்தேன் என்றால் காவல் நிலையப் பணியில் இருந்தேன். காவல் நிலையத்திலிருந்து நேராக இங்கு தான் வந்தேன். எனக்கு இதுகுறித்து ரகசிய தகவல் ஏதாவது கிடைத்ததா? என்றால் இல்லை. நான் காவல் நிலைய வாகனத்தில் வந்தேனா? என்றால், இல்லை. என்னுடைய வாகனத்தில் வந்தேன். எதிரியிடம் வாகன தணிக்கையில் ஈடுபடுவதற்கு முன்பு சுமார் எத்தனை வாகனம் தணிக்கை செய்திருந்தேன் என்றால் சுமார் 20 வாகனம் தணிக்கை செய்திருந்தேன். நான் அங்கு ஒரு மணி நேரம் இருந்திருப்பேனா? என்றால் இருந்திருப்பேன். கைப்பற்றுதல் மகசரை உதவி ஆய்வாளர்தான் தயார் செய்தார். அது காவல் நிலையத்தில் இருந்த அச்சிடப்பட்ட படிவம் தான் என்றால், சரிதான். நான் வரும்போது என்னை காவல் நிலையத்திலிருந்து உதவி ஆய்வாளர்தான் அழைத்து வந்தார் என்றால் சரிதான். ஆஜர் எதிரி தீனதயாளன் என்றும் அவரது அப்பா பெயர் கிருஷ்ணமூர்த்தி என்றும் எனக்கு உதவி ஆய்வாளர் தான் தகவல் சொன்னார். அவர்கள் யாரிடம் கேட்டு இந்த தகவலை பதிவு செய்தார்கள் என்றால், அது குறித்து எனக்கு தெரியாது. கைப்பற்றப்பட்ட

பொருட்களை காவல் நிலையத்திற்கு யார் எடுத்து வந்தது என்றால், நாங்கள்தான் எடுத்து வந்தோம். சான்று பொருள் கைப்பற்றப்பட்ட பிறகு அங்கு சுமார் எத்தனை மணி நேரம் இருந்தோம் என்றால், அதன்பிறகு ஒரு மணி நேரம் இருந்தோம். சம்பவம் நடந்ததாக நான் சொல்லும் நேரம் பகல் நேரம்தான். ஜங்ஷன் பகுதி தான் இருசக்கர வாகனம் மற்றும் மக்கள் நடமாட்டம் உள்ள பகுதி என்றால் சரிதான். நான் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றும், எந்த சான்று பொருட்களும் என் முன்னிலையில் கைப்பற்றப்படவில்லை என்றும், புள்ளியியல் கணக்கிற்காக உதவி ஆய்வாளர் பதிவு செய்த பொய் வழக்கில் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.